**கட்டான பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டான பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானங்களில் இருந்து செலுத்தும் அடிப்படையில் கம்பெக்டர் ஒன்றும் 02 டெக்ரர்களையும் கொள்வனவு செய்தலை கணக்கு வைக்கும் போது கடன்பட்டோர் கணக்கு ரூபா 2,014,000 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செலவின கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 8,278,500 தொகை பெறுமதியான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2018 திசெம்பர் மாதத்திற்குரியதா | ஆண்டிற்குரிய | ஆண்டின் மிகை திரண்ட |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 115,068 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதியத்திற்கு சீராக்கப்பட்டமையினால் அப்பெறுமதி அந்த தொகையால் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டமையினால் மீண்டும் சரி செய்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (ஈ) | தவணைப் பணமாக செலுத்துவதற்காக கடன் அடிப்படையில் பெறப்பட்ட மற்றும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தி தீர்க்கப்படாத ரூபா 4,517,937 தொகையான கம்பெக்டர் மற்றும் டேலர் வாகனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்ட தவணை பணம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (உ) | நன்கொடையாகக் கிடைத்த ரூபா 6,221,373 தொகையான கம்பெக்டர் வாகனம் மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டு அதனை களஞ்சியத்திலிருந்து அகற்றும் போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஊ) | மீளாய்வாண்டில் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 30,327 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டமையை சரி செய்வதற்காக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பெறுமதி இரட்டைக் கணிப்பீடு செய்ய முடியாது. | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (எ) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து நிர்மாணிக்கப்படுகின்ற கட்டான உப அலுவலக கட்டிடத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்தி தீர்க்கப்பட்ட ரூபா 23,697,498 பெறுமதியொன்று மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தி தீர்க்கப்பட்ட நிர்மாணத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஏ) | 2004 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட டெக்ரர் வாகனத்தின் கிரயம் மதிப்பீடு | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | அறியத்தருகின்றோம். |
| (ஐ) | பௌதீக இருப்பு மீதி கணக்குகளில் சீராக்கப்படாமல் ரூபா 12,501,427 தொகையான இருப்பு பேரேட்டின் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கங்களைச் செய்து பௌதீக இருப்பு மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஒ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2019 செம்தெம்பர் 21 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகள் கிடைக்க வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்படாமல் இருக்கும் போது பெறவேண்டிய நிலுவை சம்பளம் மற்றும் உறுப்பினர் படியாக முறையே ரூபா 58,904,638 தொகை மற்றும் ரூபா 1,897,525 தொகைகள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதற்காக தேவையான ஆலோசனைகளைப் பெற்று மீண்டும் இந்த கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஓ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2019 செப்தெம்பர் 21 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காகவும், முன்னைய ஆண்டிற்காகவும் கிடைக்க வேண்டிய ஆதன கடன் வட்டி பெறவேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்படாமல் இருக்கும் போது மீளாய்வாண்டிற்காக ரூபா 496,248 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 240,319 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | அதற்காக தேவையான ஆலோசனைகளைப் பெற்று மீண்டும் இந்த கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஔ) | நன்கொடையாகக் கிடைத்த ரூபா 43,320,500 பெறுமதியான உதம்மிட்ட புதிய சுடலைக்கூடம் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத மின் பிறப்பாக்கி இயந்திரம் என்பன மூலதனமாக்கப்படவில்லை. | நன்கொடையாக கிடைத்த சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 06 கணக்கு விடயங்களின் கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறான பயன்பாட்டு பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 97,775,073 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 15 வருடங்களுக்கு முன்னர் 08 வேலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 139,615 தொகையான முற்செலுத்ததல்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 40,375,618 பெறுமதியான கணக்கு மீதிகளுக்குரிய பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவு | கூறிடப்பட்ட காணி விற்பனையில் இருந்து பெறப்பட்ட தொகையில் 01 சதவீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் முதல் 06 மாதங்களில் காணிகள் கூறிடப்பட்டு விற்பனை செய்ததன் அடிப்படையில் அறவிடப்பட்ட 01 சதவீத தொகை, உள்ளபடியான விற்பனை பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரின் நிதிப் பிரமாணம் 371(2) | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,028,360 தொகையான முற்கொடுப்பனவு பெறுமதியொன்று 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | முற்கொடுப்பனவு பெறுமதியை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | 2018 யூலை 19 ஆந் திகதிய 2018/e-Local Government-01 ஆம் இலக்க மேல் மாாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | இணையதளம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் கொடுப்பனவு செய்வதற்கும் பிரஜைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அந்த செயற்பாடுகள் முடிவுற்றதும் முன்னேற்ற அறிக்கையிடப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 170,504,415 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 70,277,529 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 36,425 | 44,107 | 44,991 | 27,343 | 36,100 | 46,838 | 46,990 | 28,392 |
| (ii) | வாடகை | 734 | 1,772 | 1,773 | 20 | 1,155 | 923 | 932 | 29 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,862 | 1,186 | 1,186 | - | 1,530 | 1,266 | 1,948 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 125,278 | 125,278 | 125,278 | - | 155,220 | 155,220 | 98,088 | - |
| | | 165,299 | 172,343 | 173,228 | 27,363 | 194,005 | 204,247 | 147,958 | 28,421 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 28,536,787 தொகையான ஆதன வரி மீதியில் மீளாய்வாண்டில் ரூபா 11,371,221 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 17,165,566 ஆகும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடும் சதவீதத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அக்கரபனஹ, சம்பத் பிரதேசத்தில் அமைந்துள்ள 17.5 பேர்ச் காணிக் கூறொன்று பொது வசதிகளுக்கா சபைக்கு கையளித்து 25 வருடங்கள் கடந்த போதிலும், பாதுகாத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் அந்த காணியில் மரங்களாலும் கொங்கிரீட் கற்களினாலும் பூர்த்தி செய்யப்பட்ட சிறிய அளவிலான 02 வீடுகள் அனுமதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்து உறுதியை கையேற்றுக் கொள்வதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | மிரிஸ்வத்தையில் அமைந்துள்ள சபீடியாவத்தை காணிக்காக 2019 யூலை 19 ஆம் திகதி கூறிடல் அனுமதிக்கப்பட்டு பேர்ச் ஒன்று ரூபா 95,000 முதல் ரூபா 125,000 வரை குறைவான விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட்ட 01 வீத விற்பனை வரித் தொகை ரூபா 499,792 ஆகும். | உள்ளபடியான விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறோம் என அறியத்தருகின்றோம். |
| (இ) | ரத்தொலுவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் பேல் செய்யும் நிலையமொன்றை நிர்மாணிக்கும் போது அதன் கூரைக்கு இரும்பு கம்பிகளை இடுவதற்காக ரூபா 328,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 2019 செப்தெம்பர் 12 ஆம் திகதி ரூபா 327,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கூரையின் சிவிங் செய்வதற்காக மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக அந்த இரும்பு கம்பிகள் மழையில் நனைந்து துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. | சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். | கட்டிடத்தின் மிகுதி நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கையளிக்கப்பட்ட ரத்தொலுகம வீடமைப்பு தொகுதியின் சுற்றாடலில் அமைந்துள்ள 04 இறைச்சிக் கடைகள் கேள்வி கோரப்படாமல் வாடகையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி கேள்வி கோரப்படாமையினால் சபைக்கு உரித்தாக வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு வழங்குவதற்காக பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் வருடாந்த கேள்வி கோரல்கள் மூலம் கோரப்படாதிருந்ததுடன் கோரிக்கை அடிப்படையில் வாடகை பெறப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கொந்தகம்முல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள 40 பேர்ச் நில அளவில் நிர்மாணப் பொருட்களை வழங்கும் தொழில் முயற்சியொன்றை நடாத்துவதற்காக வியாபாரி ஒருவரின் கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பெறுகை நடைமுறைக்கு புறம்பாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மாதாந்த வாடகை ரூபா 2,000 ஆக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்காக உபயோகிக்கப்பட்ட அடிப்படை வெளிப்படுத்தப்படாதிருந்ததுன் வாடகைக் கால எல்லை 2019 நவம்பர் 15 ஆம் திகதி முதல் 2020 நவம்பர் 14 வரை மேலும் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு வழங்குவதற்காக பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து மதிப்பீடு பெறப்பட்டவுடன் 2019 நவம்பர் மாதம் முதல் திருத்தப்பட்ட வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**3.3 சொத்தக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு நன்கொடையாக கிடைத்த டெக்ரருக்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமையின் காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக இது வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதனை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | ரூபா 525,000 பெறுமதியான செயற்படு நிலையில் காணப்படாத 03 பொப் கெட் இயந்திரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்படு நிலைக்கு கொண்டுவர முடியாததாக காணப்படுமாயின் விற்றுத் தீர்க்கப்பட வேண்டும். | விற்றுத் தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் உங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறியத்தருகின்றோம். |